310

OFFICE OF THE REGIS...
14 JAN 19..

உ

ஹரி ஓம்:

ஸ்ரீ வீரபோகவசந்தராய நம:



கலியுக மகத்துவமாகிய

# காலக்கியானம்.

இஃது

போத்தனூர் வீரப்பிரமம் அவர்களால், தெலுங்கு பாஷையில்
அருளிச்செய்ததை
திருவநகரில் வசிக்கும் திருக்கன்னையார் குமாரர்
அனந்தசுப்பையனால்
தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு

கொழும்பு, டாம் ஸ்டிரீட்டில் 102-ம் நீர் வீட்டில் வசிக்கும்
அருணாசலம்செட்டியார் அவர்களாலும்
சா. பொன்னையாசெட்டியார் அவர்களாலும்
அச்சிடப்பட்ட பிரதிக்கிணங்க

திருநெல்வேலிப் பாலம்
சு. முத்தையாபிள்ளையவர்களால்,

திருநெல்வேலிப் பாலம்
ணசன் பிரிண்டிங் பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

1924

அணா 2

உ

ஸ்ரீ தேவி சகாயம்.

# கலியுகத்தின் மகத்துவமாகிய,

# காலக்கியானம்.

## காப்பு-வெண்பா.

நல்லவினாயகனை நாள்தோறுமே தொழுதால்
அல்லல் வினையெல்லா மகலுமே—சொல்லரிய
வீரவசந்தமா மேருவெனு மிப்பொருளாம்
சீதரனை யெப்பொழுதுந் தேற்று.

## துதி.

ஸ்ரீ சாம்பசிவ மூர்த்தியே நம:
ஸ்ரீ வீரபோக வசந்தராய நம:
ஸ்ரீ சிதம்பர தீக்ஷதரே நம:
ஸ்ரீ இராமயோகி ஐயரே நம:
ஸ்ரீ கனகதுர்க்கி யம்பாளே நம:

## ஆசிரிய விருத்தம்.

சீர்பெற்ற உலகெலாம் இருளற்று தெளிபெற்ற
ஸ்ரீ விஷ்ணு அவதாரமாய்
ஜெகதலம் புகழ்பெற்ற காஷ்மீர தேசத்தில்
திலர்தம்பாள் கெற்பமதனில்
பேர் பெற்று வாழ்கவே பிள்ளையாய்ச் ஜென்மித்துப்
பூமி தனிலே பிறந்து
பெரியோர்க ளாதரவிற் சம்பன்ன பாஷைகள்
பிரபல்ய மாய்ப் படித்து
பார்பெற்ற மகேந்திரகிரி பர்வதத் தடியினிற்
பட்டண மமைத்த பின்பு
பாராசர் பெற்றமணி முடிசூடி குடையினிற்
பாருலகை யாளு மன்னன்
கார்பெற்ற முகில்வண்ண வீரபோக வசந்த
கருணா கடாக்ஷ பொருளைக்
கண்டிவர் படித்தவர் கருத்தினில் நினைத்தவர்
கதிபோல் வாழ்குவாரே.

## சரித்திர வரலாறு.

ஸ்ரீ கௌதம தீர்த்தத்திற்கடுத்த கேதாரவனத்திலே இருக்கும் குகைக்குள்ளாக அநேக காலம் தவசாய்கின்ற மகாத்மாக்கள் ஸ்ரீ சிதம்பரதீக்ஷதருக்கும், ஸ்ரீராமயோகிஐயருக்கும், ஸ்ரீ வீரபிர்மத்தினுடைய சரித்திரத்தை உபதேசித்து நீங்கள் இந்த உலகத்திலிருக்கிறவர்களுக்குப் போகித்துப் பிரசங்கம் செய்யுங்களென்று ஆக்ஞாபிக்க, அவ்வண்ணமே ஸ்ரீசிதம்பரதீக்ஷதரும் ஸ்ரீ ராமயோகிஐயரும் துன்மதி௵ வைகாசிமீ 2உ திரயோதசி வியாழக்கிழமை இந்த சுபதினத்தில் இந்த சௌசன்னிய பத்திரிகையைப் பிரசுரித்தார்கள் ஸ்ரீ கணபதியே நம.

ஓர்நாள் தேவேந்திர மஹாராஜாவானவர் முப்பத்துமுக்கோடி தேவர்களையும், நாற்பத்தெண்ணாயிரங்கோடி ரிஷிகளையும், சகலமான தேவர்கள்முதலான யாவர்களையுந் தம்முடைய தெய்வ சபைக்கழைப்பித்துத் தேவர்களைப்பார்த்து ஓர் வசனம் சொல்லுகின்றார். ஓ தேவர்களே, பூலோகத்தில் துஷ்டர்கள் தனதான்ய சம்பத்துக்களால் கர்வமடைந்து, பெரியோர் சிறியோரென்றறியாது மரியாதையில்லாமல் வம்புதும்புகளான வார்த்தைகளைப் பேசுகிறதும், ஜனங்களைத் தூஷணிக்கிறதும், இப்படி துஷ்டர்கள் அதிகரித்துத்தான் தருமங்கள் முதலான விஷயங்களையும் நல்லோர்கள் பெரியோர்கள் பத்தினிமார்க்கமாயிருக்கிற தாய்மார்களையும் எண்ணாமல் நடக்கிறபடியால் பூமியில்பாவம் மூன்று பங்கும் புண்ணியம் ஒரு பங்குமாயிருக்கிறது அதனாலே பூமிதேவியானவள் பாரஞ்சுமக்கமாட்டாமல் முறையிடுகின்றாள். இதற்கென்னசெய்வோமென்று தேவர்களைப் பார்த்து தேவேந்திர மகாராஜா கேட்க, அதற்குத்தேவர்களெல்லோரும் ஒருமித்து சொல்லுகிறார்கள், வாருங்களைய்யா தேவேந்திர மகாராஜாவே, தங்களுக்குத் தெரியாத யோஜனைக்கு எங்களிடத்திலென்ன இருக்கிறதோ? ஆனால் எங்களுக்குத் தெரிந்தவரைக்கும் சொல்லுகிறோம்.

அந்த கலியுகத்தில் இதுவரையில் பாவம் அதிகமில்லாமலிருந்தது இப்பொழுது துஷ்டர்கள் அதிகமானபடியால் பாவம் அதிகமாயிற்று ஆகையினாலே அந்தத்துஷ்டர்களைச் சம்காரஞ்செய்ய மும்மூர்த்திகளாலேயொழிய மற்றவர்களாலாகாது. அப்படியிருப்பதால், உங்களுடைய திருவுளத்துக்கேற்றபடியே நடவுமைய்யாவென்று தேவர்கள் சொல்லக்கேட்டு தேவேந்திர மகாராஜா சொல்லுகிறார் ஓ தேவர்களே பூமியிலே துஷ்டர்களதிகமானால் அவர்களைச் சம்ஹாரஞ்செய்து பூமிபாரந்தீர்க்க ஸ்ரீமகாவிஷ்ணுவே அவதாரஞ்செய்யவேண்டுமே தவிர வேறில்லை.

நாம் அந்த ஸ்ரீமந் நாராயணரிடத்திற்போய்ச் சொல்விக்கொள்வோம் வாருங்கள் தேவர்களே என்று சொல்ல, அப்பொழுது தேவர்களெல்லாரும் தேவேந்திரமகாராஜா முதலானவர்களும் கூடிக்கொண்டு வைகுந்தம்போய் ஸ்ரீ மகாலெட்சுமி மனோகரனை ஸ்ரீமந் நாராயணமூர்த்தியைக்கண்டு சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து சுவாமி, பரமபுருஷா, அகிலாண்டநாயகா, ஆதிபரப்ரம்ம வஸ்துவே, என்று தேவேந்திரன் முதலான தேவர்களெல்லோரும் ஸ்தோத்திரஞ்செய்துகொண்டு நிற்கையில் ஸ்ரீமந் நாராயணமூர்த்தியானவர் தேவேந்திரனையும் தேவர்களையும் பார்த்து நீங்கள் என்ன காரணத்தினிமித்தமாய் இவ்விடத்திற்கு வந்தீர்களென்று திருவுளப்பற்ற, தேவர்கள் சொல்லுகிறார்கள். ஓ பரமபுருஷா, பரப்ரமவஸ்துவே' ஆதிமூலமே, அநாதரக்ஷகா சர்வலோக தயாபரமூர்த்தியே, பூலோகத்திலே கலியுகமானபடியால் துஷ்டர்கள் அதிகமாகி மதோன்மத்தராய்கர்வமடைந்திருக்கிறார்கள் அதுவுமல்லாமல் கர்வவல்லமையுடைய ராஜ்யமாயிருக்கிறது. சிலராஜர்கள் நீதியில்லாமல் துர்நீதியாய் ராஜ்யமாளுகிறபடியால்பூலோகத்தில் பாவம் மூன்று பங்கும், புண்ணியம் ஒருபங்குமாய் நடந்துவருகிறது. அப்படியிருப்பதால் பூமிதேவி பாரம் பொறுக்கமுடியாமல் முறையிடுகின்றனள்,

இந்தக் கலியுகப்பிரமாணம் நாலுலெக்ஷத்து முப்பத்தீராயிரம் வருஷம், அதில் இதுவரையிற் சென்றது ஐயாயிரத்திருபது வருஷமானதால் அதற்குள் பாவம் மூன்றுபங்கும், புண்ணியம் ஒருபங்குமானபடியால் பூமிதேவி பாரம்பொறுக்கமுடியாமல் முறையிடுகின்றாளென்று தேவர்கள்சொல்ல, அதுகேட்டு வைகுந்தநாதராகிய ஸ்ரீமந் நாராயணமூர்த்தியானவர் திருவுளம்பற்றுகிறார் தேவேந்திரனே, நீங்கள்சொல்லுகிறது சரிதான் ஆனால்பூலோகத்திலே ஜென்மித்து துஷ்டர்களை சம்ஹாரஞ்செய்து பூமிபாரந்தீர்க்கிறோம், நீங்கள் அதைப்பற்றி கிலேசப்படவேண்டியதில்லை, என்றுசொல்லி, பகவானை ஸ்ரீமந் நாராயணமூர்த்தியும் அப்பொழுதுதானே ஸ்ரீ சாம்பசிவனுக்கு அறிக்கைசெய்ய, அவரும் கருணைகூர்ந்து பிரமதேவரை வரவழைத்து மும்மூர்த்திகளுங்கூடியிருக்கின்றபொழுது, ஸ்ரீமந் நாராயணமூர்த்தி சொல்லுகின்றார்; ஓய் புண்ணியபுருடரே, நான் துஷ்டநிக்ரஹசிஷ்டபரிலாணம் பண்ணி பூமிபாரந்தீர்க்கும் பொருட்டாய் பூலோகத்தில்போய் காஷ்மீரதேசத்து இராஜாவாகிய தர்மராஜாவம்ஸத்தில் பிறந்திராநின்ற ஜெயசிங்கு மகாராஜன் பத்னியாகிய திலர்தமையம்பாளென்கிற பதிவிரதைவயிற்றில் பிறக்கின்றோம் நீங்களிருவரும் நமக்கு ஒத்தாசையாக பூலோகத்தில் உங்களுக்குத்தகுந்த பிர்மருத்திரவம்சத்திலே பிறந்து நம்முடைய இருப்பிடத்திற்குவந்து சேருங்களென்று சொன்னார். அப்படியே பிர்மாவானவர் பிர்மகுலத்திலேபிறந்து ராமயோகியென நாமகரணம்பெற்றுவாழ்ந்து

கொண்டிருந்தார். ஸ்ரீ சாம்பசிவன் முக்கோடிகிராமத்தில் ருத்திரவம்சத்தில் சிதம்பரதீக்ஷதராகவும் அவதரித்தார்கள். உடனே அந்த கபடநாடக சூஸ்திரதாரியாகிய ஸ்ரீமகா விஷ்ணுவானஸ்ரீ துர்க்காதேவியான சத்தியை அழைத்துநீ துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனஞ் செய்யும்பொருட்டு பூலோகத்திற் பிறக்கவும், மற்ற தேவாளைப் பரிவாரங்களாகவும் பிறக்கும்படி கட்டளையிட்டுத்தேவர்களைத் தங்களிடத்திற்குப்போக உத்தரவு செய்தார் உடனே அந்த ஸ்ரீமந் நாராயணமூர்த்தியானவர் அந்தக்ஷணமே காஷ்மீர தேசத்துக்கு அரசனான ஜெயசிங்குமஹாராஜாவுக்கு ஆக்ரமித்து பாரியாளான திலர்தமையம்பாள் கெற்பத்தில்உற்பத்தியாகியமுப்பத்திரண்டு லக்ஷணங்களுடன் சுபதினத்தில்சாதாரணஹு தை மீ 20௨ குருவாரத்திலே அவதரித்தார் அவரைப்பார்க்குமிடத்து கோடிசூரியபிரகாசம்போலே யிருந்தார். நவக்கிரஹங்களெல்லாம் சுபஸ்தானத்திலேயே யிருந்தது. அந்தப் பகவான்பிறந்து சில நாளைக்குப் பின்பு பெரியோர்களைக் கண்டு தெரிசிக்கவேண்டுமென்றகருத்துண்டாகி, அந்தப்பாலகன் ஏகமாய்ப் புறப்பட்டுச் சோணியதேசத்துக் கௌதம தீர்த்தத்திற்கடுத்த கோதாபுரிஆரண்யமான பத்திரிகேதார வனத்திலேவருகையில், ஒருகுகையைக்கண்டு அந்தக்குகைக்குள்ளாக பார்க்க அங்கே அநேகநாளாய் கண்ணைமூடிக்கொண்டு தபசுசெய்கிற மகாத்துமாக்களைக்கண்டு அவர்கள்பாதத்திலே சாஷ்டாங்கமாகநமஸ்காரம்செய்துகைகளை கட்டிக்கொண்டு இவர்கள் எப்போது கண்ணைவிழிக்கிறார்களோவென்று வெகுபயபக்தி விசுவாசத்துடன்நின்றார் அந்தமகானுபவரான முனீஸ்வரர்கள் நேமநிஷ்டைமுடித்து கண்ணைந்திறந்து முன்னேநிற்கப்பட்ட பாலகுமாரனைப்பார்த்து இந்தப் பாலகன் யாரென்று தங்களுடைய ஞானதிருஷ்டியினால் பார்க்குமிடத்தில் ஸ்ரீமந் நாராயணமூர்த்திதானே பூமிபாரந்தீர்க்குநிமித்தமாக பூலோகத்திலே அவதரித்து இருக்கிறாரென்று அவருடையவரலாற்றைநன்றாயறிந்து அந்தப்பாலகனைப் பூஜித்து ஓய் இராஜகுமாரா நீ இந்தப்பூலோகத்தை ஆளுகிறநிமித்தம் ஸ்ரீமந்நாராயணமூர்த்தியினுடைய அம்சையினாலே காஷ்மீரதேசத்து இராஜாவாகிய ஜெயசிங்கு புத்திரராய் ஜெனித்து நீ இந்த அறுநூறுகோடி பூமண்டலமும் ஏகசக்ராதிபதியாய் ஒருகுடையின்கீழ் ஆளப்போகின்றீர். உம்முடைய நாமதேயம் வீரபிர்ம்மமென்று சாற்றினார்கள்.

அப்போது அந்தப்பாலகன் ஓ முனீஸ்வரர்களே சுவாமி என்பேரில் கருணைகடாக்ஷம்வைத்து சகலவித்தைகளும்சம்பன்ன பாஷைகளும் நாலுவேதமுதலான சாஸ்திரங்களும் உபதேசித்தருள வேண்டுமென்றுகேட்க அதற்கு முனீஸ்வரர்கள் சந்தோஷப்பட்டு அப்படியே ஆகட்டுமென்றுசகல வித்தைகளும் கற்பித்துக்கொடுக்கபாலகன் அப்படியே வித்தியாப்பியாசஞ்செய்துவந்தனர்

சில நாளைக்கு முன்னமே பிர்மதேவரும் ஸ்ரீ சாம்பசிவனும் காசிமாநகரத்தில் பிர்மாவானவர் பிர்மகுலத்திலேபிறந்து இராமயோகி ஐயரென்று நாமகரணம்பெற்று வளர்ந்துகொண்டிருந்தார் ஸ்ரீ சாம்பசிவனானவர் நந்திபுர ராச்சியத்திலே பூசைநகரத்தைச்சேர்ந்த முக்கோடி கிராமத்தில் ருத்திரவம்சததிலேபிறந்து சிதம்பர தீக்ஷதரென்று நாமகரணம்பெற்று வாழ்ந்துகொண்டிருந்தார் அப்படியிருக்கின்றபொழுது ஓர் நாள் இராமயோகி அய்யரிடத்திற்கு நாரதமகாமுனீஸ்வரர் வந்து, ஓய் ராமயோகி ஐயரே! அகிலாண்டகோடி பிர்மாண்டநாயகரான ஸ்ரீமந்நாராயண மூர்த்தியானவர் காஷ்மீரதேசத்து ராஜாவான ஜெயசிங்கு புத்திரராக ஜெனித்து அங்கேயிருந்து சிலநாளைக்குப்பிறகு ஈசானிய தேசத்திலே கௌதம தீர்த்தத்திற்கு அருகாமையிலிருக்கிற கோதாவரி ஆரண்யமான பத்திரிகேதார வனத்தில் ஒரு குகையைக்கண்டு அதில் தபசுசெய்கிற இரண்டு யுகாந்தகாலத்து முனீஸ்வரர்களிடத்திற்குப்போய் நாலுவேத சாஸ்திரங்களும் வில்வித்தைமுதலான சம்பன்ன பாஷைகளும் அப்பியாசஞ்செய்துகொண்டிருக்கிறாரென்று நாரதமகா முனீஸ்வரரானவர் விபரமாய்ச்சொல்லிவிட்டு அவர் எதாஸ்தானத்திற்குப் போய்ச்சேர்ந்தார்.

அதுகேட்டு இராமயோகி ஐயரானவர் நாரதர் சொல்ப்போல் அந்தக்ஷணமே எழுந்திருந்து சிதம்பர தீக்ஷதரிடத்திற்குப் போகும்போது, அவர் எதிரேவரக்கண்டு இராமயோகிஐயர் சிதம்பரதீக்ஷதரை பூசித்து நமஸ்காரஞ்செய்ய, சிதம்பரதீக்ஷதரும் எதிர் நமஸ்காரஞ்செய்து ஸ்ரீமந் நாராயணமூர்த்தியினுடைய பிறப்பும் அவரிருப்பிடமும் நாரதர் சொன்னபிரகாரம் சிதம்பரதீக்ஷதருக்குச் சொல்ல, அவர் சந்தோஷப்பட்டு நாமிருபேரும் அந்தப்பகவான் வித்தியாப்பியாசஞ் செய்யுடமிடத்திற்குப்போய் அவ்விடத்திலிருக்கிற திவ்வியதேஜஸுள்ள மூர்த்தியாகிய பாலகுமாரனையும் முனீஸ்வர மகாத்துமாக்களையும் தெரிசித்து, அவர்கள் சொற்படி நடப்போம் வாருமையா இராமயோகி ஐயரே என்றுசொல்லி இருபேரும்கோதாவரி ஆரண்யமாக பத்திரிகேதாரவனத்திற்கு வந்து அவ்விடத்திலே அநேக காலமாக தபசுசெய்கிற முனீஸ்பரரைக் கண்டு தெரிசனஞ்செய்து நிற்கையில் அவர்களிடத்தில் கோடிசூரியப் பிரகாசம்போல் முப்பத்திரண்டு லட்சணங்களுடனே விளங்காநின்ற பகவானைப்பார்த்து இந்த அருட்பிரகாசமான பாலகன் யாரென்றும் இந்த பிலத்துவாரத்திலேயிருக்கிற காரண மென்னவென்றும் முனீஸ்வரர்களைக்கேட்க, அந்த முனியீஸ்வரர்கள் அனுக்கிரகம் செய்கிறார்கள். இந்தச்சிறுபிள்ளையாகிய பாலகன் பூமண்டலம் முழுவதும் ஆளுகிறநிமித்தமாய் ஸ்ரீமந்நாராயணமூர்த்தியினுடைய அம்சையினாலே காஷ்மீரதேசத்து இராஜாவாகிய ஜெயசிங்கு மகாராஜா

வின் ஸ்திரீயாகிய சிலர்தமையம்பாளென்கிற பதிவிரதைகெற்பத்
தில் உற்பத்தியாகி எங்களிடத்தில்வந்து வீரபோகவசந்தராய
ரென்று பேரும்பெற்று வேதமுதலான சகலவித்தைகளும் சம்
பன்ன பாஷைகளும் அப்பியாசஞ்செய்து கொண்டிருக்கிறார்.
ஸ்ரீ இராமயோகி ஐயரே, நீர் யாரென்றால் பிர்மாகவும், சிதம்பர
தீக்ஷதரே, நீர் யாரென்றால் ஸ்ரீ சாம்பசிவனாகவும் இந்தப் பூமி
பாரந்தீர்க்குங்காரணமாய் வீரபோகவசந்தராயரும் நீங்களிருவ
ரும் திருமூர்த்தி களானபடியாலே பூலோகத்தில் வந்து பிறந்
திருக்கிறீர்கள். இன்னம் - கொஞ்சநாளைக்குள்ளே பூமண்டல
மெல்லாம் ஸ்ரீமந் நாராயணமூர்த்தியான வீரபோகவசந்தராய
ரும் துஷ்டரை சம்மாரம் பண்ணி பஞ்சசத்கோடி பூமண்டல
மெல்லாம் ஒரு குடையின்கீழ் ஆளப்போகிறார். அதற்கு முன்பாக
துஷ்டர்கள் அக்ஷய வருஷத்துக்குள்ளாக நசித்துப்போவார்கள்
புண்ணியவான்கள் அவர் பாததெரிசனங்கண்டு மகா பாக்கியம்
பெற்று சுகமாக வாழ்ந்துகொண்டிருப்பார்கள். ஆனால் அந்த
துஷ்டர்கள் எப்படி நசித்துப்போவார்களென்றால் சொல்லுகி
றோம் அந்தத்தேசங்களிலே சகல வியாதிகளடைந்து சிறிது
பேர்கள்நசித்துப்போவார்கள். அதுவுமல்லாமல் அன்னியோன்ய
மித்துருவத்தினாலேயும் சத்துருக்களினாலேயும் மித்துருக்களி
னாலே சிறிது பேருக்கு அவதியும் பாதகங்களதிகமாயும் அதற்
காக கனகதுற்கையம்பாளென்ற சத்தியானவள் பூமியிலே
பிறந்து உக்கிறங்கொள்ளுகிறாள் அங்க உக்கிரத்தினாலேயும்
மத்தமலைகளினுடைய உச்சியிலே புகையானது எரிச்சலால்
சிறிதுஜனங்கள் நசித்துப்போவார்கள் சிலர்சிவன் விஷ்ணு ஆலய
முதலான தேவாலயங்களிலிருந்தும் தேவதைகளும் மூர்த்தி
சொரூபமாயெழுந்திருந்து அதிக உச்கிரங்கொண்டு அந்தக்கிரா
மங்களில் நடனமாடுவார்கள். அதினாலேபாவிகள் மனச்சஞ்சலப்
படுவார்கள் மல்லிகார்ச்சுன சுவாமி மனிதர்களிடத்திற்பேசுவார்
அப்போது கல்மழையினாலே சிலபேர்கள் நசித்துப்போவார்கள்
காஞ்சிபுரம் காமாக்ஷியம்மாள் உக்கிரங்கொண்டு தக்ஷண தேசத்
தில் மனிதர்களையும் குழந்தைகளையும் சம்ஹாரஞ் செய்வாள்
அப்போது தக்ஷணத்திலுள்ள மனிதர்கள் பாவதோஷங்கள்
அதிகமாகச்செய்வார்கள் அந்தப்பாவங்களை சம்ஹாரஞ்செய்யும்
பொருட்டாய் கதிர்காமதேசத்து கரும்பாம்புண்டாகி துஷ்டர்
களை நஷ்டம்பண்ணும். கர்னாடகதேசத்திற்கு காளிகாதேவியும்
துலுக்கர்தேசத்திற்கு லக்காதேவியென்றதுர்க்கையும், நாகேந்
திரதேசத்திற்கு முள்ளும், காண்டயருஜ்யத்திற்கு பத்திரகாளி
யும், மத்திமதேசமான தமிழ்தேசத்திற்கு வீரபத்திரசுவாமி
யும், நந்திராஜயத்திற்கு நரேந்திரனும், இந்திரபாம்புமாய் அந்
தந்த தேவதைகள் நாலு திக்கிலும் உக்கிரரூபங்கொண்டு வரு
வார்கள் அப்படிவரும்பொழுது இஷ்டர்கள், பெரியோர்கள் சிறி

யோர்களுடைய வாய்களிலே கிரிமிகள் விழுந்து தலைமண்டை
வெடித்து நின்றவிடத்திலே மாளுவார்கள் இந்தப்பிரகாரமாய்
ஐந்நூறுகோடி பூமண்டலத்துக்கு பாம்புண்டாகி பலவிதமாய்
சிசுமுதல் விருத்தாப்பியமுள்ளவர்கள் வரையில் மல்லிகை பூச்சி
விழுந்து நஷ்டமடைவார்.

அப்போது மந்திரகிரியிலேயும் பூங்காவனமுதலான இடங்க
ளிலேயும் காகம் கூப்பிடும் வித்தைகள் நிகமாயிருக்கும் நரிகள்
பிராந்துகள், ஆந்தைகள் நாலுசாமத்திலும் இரவும் பகலும் ஓயா
மல் கூப்பிடும், ஆகாசத்திலே நக்ஷத்திரங்கள் காணப்படும்
லோகத்தில் அநேக கஸ்திகள் நடக்கும் மேலும் நாலுதிக்கி
லும் அந்தகாரமாம் ஆகாசத்திலும் அரகராவென்று வெகுசத்த
மாய் தொனிபிறந்து திடுமென்று கேட்கப்படும். அந்த சத்தத்
திலே சிறிதுபேர்கள் நஷ்டப்படுவார்கள் ஜெலத்திலே இருந்
திறநீர்வாழ் ஜீவஜெந்துக்களெல்லாம் லோகத்திலேவந்து பிரந்து
பூமியிலே சேர்ந்தோம் சேர்ந்தோமென்று கூப்பிடும் கைலாசத்தி
லேயிருந்து ஒருமுகமாய் கூடிவந்து திவ்வியமான கோவில்களி
லே புகுந்து எட்டுநாளிருந்து ஆடும் கூந்தல் கூப்பிடும் மறுபடி
மாயமாய்ப்போகும் சத்திகை புலியாய்வந்து சிஷ்டர்களைக்
கொல்லும், பின்னும் கோவில்களிலே ஒரு முதலை புகுந்து
கொண்டுமனுஷர்களைமிகவும்கொல்லும் குமாரசாமிகோவிலிலே
ஏழுநாள்வரைக்கும் கதவை மூடிக்கொண்டு திறக்காமலிருக்கும்
மேல்காற்று விசையாயடிக்கும் அதனாலே சிலதுபேர்கள் நசிக்
கப்போவார்கள் சூரிய மண்டலத்திலேயிருந்து கனகனவென்று
ஓர் இடிவிழும் அந்த இடியினாலே ஆரணிவேலூர் நாசமாய்ப்
போகும். வெங்கிடாசலபதி கோவிலிலே முதலை புகுந்து கூத்
தாடும். மேலாகாசத்திலிருந்து ரீங்காரமாய் ஒருசத்தம்பிறக்கும்
அந்தச் சத்தத்தினாலே லோகத்திலிருக்கிற ஜனங்களெல்லாம்
நடுநடுங்குவார்கள் தேவாலயங்களிலிருக்கிற கெருட துவஜங்க
ளெல்லாம் ஒடிந்து நாலுதிக்கும் சிதறிவிழும். திருவாலூர் வீர
பாகுசுவாமிக்கு வேர்வையாகும் அப்போது ஜனங்களெல்லாம்
கஷ்டப்படுவார்கள். மல்லிகார்ச்சுன சுவாமி நேத்திரத்திலே நெ
ருப்பாகும் அப்போது சுவர்ணம் கடகடவென்று கூப்பிடும் அத
னாலே ஆகாசதேவதைகள் வாக்கினாலே சத்தம்பிறந்து சிறிது
ஜனங்கள் நஷ்டமாவார்கள் சிவன் சடைமுடி அவிழ்ந்துவிசி
எட்டுநாட்கழித்துத் தரணியிலே விழும். அதனாலே சிலஜனங்
கள் நஷ்டமாவார்கள். திருப்பதி வெங்கிடாசலபதிசுவாமி கோ
விலிலே மகாலெட்சுமிபுகுந்திடுவாள் அவள் மாய்கைவசத்திலே
செம்மப்பிறந்துஜெகமெங்கும்நடுநடுங்கிடும் சிறிதுபாஷாய்மடிந்து
பூமியிலே நாலுதிக்கும் ஆருக்கும். திருவள்ளுவராகப் பிறந்து
அவருக்கு வேர்வையாகி அதனாலே சிறிது ஜனங்கள் நஷ்டமா
வார்கள் லெட்சுமிதேவி கண்களிலிருந்து ஜலம்வடியும் விநாயகர்

வேதமந்திரம் புண்ணிய பாராயணம் பண்ணுவார். விநாயகரு
டைய சரித்திரத்தை எங்கும்வாசிப்பார்கள். மேலும்ஸ்திரீஜாதி
கள் ஜலக்கிரீடை மிகவும் செய்து ஜலத்திற்குள்ளே காலாட்டு
வார்கள், அந்த ஜலக்கிரீடையினால் ஸ்திரீகளினுடைய கண்களி
லே இரத்தம்போல் சிவக்கும் அப்போது துலுக்கருடைய தேச
மெல்லாம் நாசமாகும். துலுக்கர்பெரியதனக்காரரெல்லாம்மிடை
ந்து போவார்கள். கண்களிலே ரத்தங்கள்கப்பிபேய்புலிகள்இரை
நீராய் ஜனங்களைச்'சேதம்பண்ணும்: எல்லோரும் துக்கித்துத்
துலுக்கர் பாங்காகுவார்கள். வீரப்பிர்ம்மம்பிறந்தநாள்முதற்கொ
ண்டு வாரவைபிரவாகி எவ்வண்ணமதிகமாயிருக்கும். ஓய் இரா
மயோகிஐயரே, சிதம்பரதீக்ஷதரேகேளுங்கள்: மேலும் சமஸ்தா
னபேரும் வீரபிர்மத்தினுடைய சரித்திரத்தைக்கேட்க மிகவும்
இச்சித்திருப்பார்கள் அமாவாசை நாளிலேராத்திரி பூரணச்சந்தி
ரன் உதயமாகும். அதனாலே சிலதுபேர்கள் 'நசித்துப்போவார்
கள்: ராத்திரியில்சூரியன் உதையமாகும் ஆகாசம் சிப்பியாகும்
பின்னும் ஆகாசம்செம்மானமிடும் அப்போதுபெரியோர்கள்புண்
ணியபுருடர்கள் அஷ்டதிக்கும் மந்திரங்களைத் துதிசெய்வார்கள்
மேலும் அஷ்டகஜமும் வானமும் ஜென்மாந்திரமே அப்பியா
சம் பண்ணுவார்கள் பட்டணங்களிலேயும் ஊர்களிலேயும் வன
ந்திரங்களிலேயும் ரத்தமழைபெய்யும். அதனாலேசிலதுபேர்கள்
நசிப்பார்கள் பட்டணவாசல்களிலே லட்சுமிதேவி துக்கித்தழு
வாள் அப்போது சமுத்திரங்களும்பொங்கும் அதனாலேதுஷ்டர்
கள் முதலானவர்கள் நஷ்டமடைவார்கள். வீரபிர்ம்மவந்தனரோ
வென்று மனிதர்களுக்குக்கேட்கும்படியாய் பூமிதேவி சொல்லி
வாழ்த்துவாள் பூலோகத்திலே முன்யுகங்களிலே எந்தப்பிரகாம்
சத்தியமாய் நடந்ததோ அந்தப்பிரகாரம் சீமைகளிலே சத்தியத்
துடனேசகலஜனங்களும் சம்பத்துவான்களாகி தர்மநீதியாய்வா
ழ்ந்திருப்பார்கள். இராமயோகிஐயரே சிதம்பரதீக்ஷதரே இந்த
பாலகுமாரனாகிய வீரபிர்மம் இவ்விடம் வந்து ஆறுமாதமாயிற்று
இன்னம்மூன்றுமாதம் இவ்விடத்திலிருந்து அப்பால் கோதாரவன
த்திற்குப்போய் அவ்விடத்திலிருந்து ஸ்ரீசாம்பசிவமூர்த்தியைப்
பூஜித்து இரண்டுவருடம் தவஞ்செய்து சிவனிடத்திலே மூன்று
வரங்கள் பெற்றுக்கொண்டு குரோதனவருஷ சித்திரைமீ சுத்த
பௌர்ணமி வியாழக்கிழமை இந்தசுபதினத்திலே இந்திரகிரிபர்
வதத்திற்குபோய் அவ்விடத்திலிருக்கிற மகாத்மாக்களையும்முனீ
ஸ்வரர்களையுப்தெரிசித்து அவர்களுடைய அநுமதியும்பெற்றுக்
கொண்டு அவ்விடத்தைவிட்டு ஸ்ரீகைலாச பர்வதத்திற்குப்போய்
மல்லிகாஅர்ச்சுனசுவாமியையுங்கண்டுதெரிசித்து அவர்களுடை
ய அனுமதியையும்பெற்றுக்கொண்டு தரிசனஞ் செய்து கார்த்தி
கைவீரர் அர்ச்சுனன்கையில் கங்கணகடகம் வாங்கிக்கொண்டு
போக நாடெங்கும்போய் அவருடைய தரிசனம்பெற்றுக்
கொண்டு,பெரியவாடையென்னும் ஊருக்குப்போய அவ்விடமிரு

க்கப்பட்ட வர்களை தன்வசப்படுத்திக்கொண்டு கெங்காதீரம்
போய்ச்சேர்ந்து அவ்விடத்திலிருந்து ... ...
தர்மராஜாக்களுடைய சிம்மாசன முத்திரையை
யுங்கைக்கொண்டு துஷ்டர்களை சம்மாரஞ்செய்து அக்ஷயவருஷம்
போனவுடனே பிரபவ வருஷமுதற்கொண்டு ஏகசக்ர சிம்மாசன
முதலாக இராச்சியபரிபாலனஞ்செய்யவருவார் அப்போது நாங்
களும் கூடவருவோம் இவர் ராச்சியபரிபாலனஞ்செய்யும்போது
மாதம் மூன்று மழைபெய்யும் பயிர்கள் செம்மையாய் விளையும்
தர்மநீதிமிகுதியாய் நடக்கும் ஜனங்கள் பாக்கியவான்களாய்தாம
சிந்தையோடு வாழ்ந்துகொண்டிருப்பார்கள் ஓய் இராமயோகி
ஐயரே சிதம்பரதீக்ஷதரே, இதுசங்கதிகளெல்லாம் எங்களுக்கு
ஸ்ரீசாம்பசிவமூர்த்தி போதித்தபடியினாலே நாங்கள் உங்களிடத்
தில் சொன்னோம் நீங்கள் எங்குமில்லாத புதுமை கேள்விப்பட்
டீர்கள். இதுகளை நீங்கள் ஓயாமல் பூலோகத்திலே சகலமான
ஜனங்களுக்குமறிவித்து எழுதியனுப்பி ப்ரசங்கங்கள் செய்யுங்
களென்று அந்தகாரத்திலே பூமியிலுள்ள சகல ஜனங்களுக்கு
எந்தப்பிரகாரம் தெரியவேண்டுமென்றால், தரித்திரவான் வாச
லிலேபொன்மாரிபொழிந்தால் எவ்வளவு மகிழ்ச்சியுண்டாகுமோ
அவ்வளவுதூரம் சந்தோஷத்துடன் பூமியிலுள்ள புண்ணியபுரு
ஷாளும் தெரிசனத்துக்கு இருப்பார்கள் பிரம க்ஷத்திரிய வைசிய
சூத்திர இந்த நான்கு வருணத்தாரும் அவர்களுடைய முறை
தப்பாமல் சந்தோஷமாக இருப்பாகள் என்று அந்த மகாத்து
மாக்களாகிய முனீஸ்வரர்கள் எங்களுக்குத்திருவுளம்பற்றினார்க
ளில்லை சிதம்பரதீக்ஷதரும் இராமயோகி ஐயரும் நீங்களிருவரும்
சொன்னவார்த்தைகள் உள்ளபடிதான் என்றெண்ணி நடக்கிற
பேர்களுக்கும் பத்திரிகையைவைத்து பூசைபண்ணியவர்களுக்
கும் ஆயுள்பரியந்தம் ஆரோக்கியமும் கனதன வஸ்துக்களும்
வாகனாதிகளும்பெற்று சுகமாயிருப்பார்கள்.

இதை எழுதாமலும், படிக்காமலும், படித்ததை கேட்காம
லும், அசட்டையாகி இகழ்ச்சிசெய்தபேர்களுக்கும் துஷ்டபாவி
களான ஜனங்களுக்கும் அட்சயவருஷத்திற்குள்ளாக அதமாய்
போகும்படியாய்க் கஷ்டங்கள் சித்திக்கும், அவர்கள் வாயிலே
கிருமிகளுண்டாகி அதனாலே அவதிப்பட்டுப் புண்ணியத்திற்
குள்ளாகாமல் பாவத்திற்குள்ளாகிப்போவார்கள்.

இதுவுமல்லாமல் கண்டனை தண்டனைசெய்ய கனகதுர்க்கையம்
பாள் விசாரிக்கவருகின்றான். அதனாலேயும் ஜனங்கள் அதமாய்ப்
போவார்கள், சிதம்பர மூர்த்தியே, இராமயோகி ஐயரே, நீங்க
ளிவ்விடத்திலிருக்கப்பட்ட மகிமைகளெல்லாம் பார்த்தீர்களே
இனிமேல் நீங்களிருவர்களும் தங்களுடைய ஆச்சிரமத்திற்குப்
போய் அவ்விடத்திலிருந்து பூலோகத்திலிருக்கப்பட்ட ஜனங்
களுக்கெல்லாந் தெரியத்.................................................

தக்கதாக மேலேசொல்லிய விபரங்களைக் குறித்து பத்திரிகையெழுதி அந்தந்த தேசங்களுக்கு அனுப்பிவித்து இனிமேலாகிலும் பாவங்களைச் செய்யாமலும் மேலான தர்மங்களையும் புண்ணியங்களையுந் தேடிக்கொள்ளும்படியாயும் இந்தப்படி நடந்துகொள்ளும்படியாய்த்தெரிவியுங்கள் பூலோகத்திலே துஷ்டர்களதிகரித்தபடியினாலே அவர்களை தண்டனை பண்ணவேண்டியநிமித்தமாய் போசராஜாவினண்டையில் சக்தியாகிய கனக துற்கையம்பாள் உற்பத்தியாயிருக்கின்றாள் ஆனதால் நீங்கள் அந்த கனக துற்கையம்பாளையும் பத்திரிகையிலெழுதி அந்தந்த தேசங்களுக்கு அனுப்பிவித்து அதற்கனுகூலமாய்நீங்களுமிருந்து துஷ்டர்கள் முதலானபேர்களையுந் தண்டனைபண்ணி அறியும்படியாய் செய்விக்கிறதென்று முனியீஸ்வரர்கள் ஆக்ஞாபித்தபடியினாலே நாங்கள் அவர்களனுமதியைப் பெற்றுக்கொண்டு எங்களாச்சிரமத்திற்குவந்து பூலோகத்திலிருக்கப்பட்ட புண்ணிய புருடர்களுக்குத்தெரியவேண்டியநிமித்தம் இந்தப்பத்திரிகையையெழுதி அனுப்பினோம் அதை அந்த மச்சதேசத்தைத் துரைத்தனஞ்செய்யப்பட்ட துஷ்டாத்மாக்கள் கண்டு எங்கள்பேரிலே சீற்றங்கொண்டு நீங்கள் ஆங்காரமாய் முடிவுகாலம் வந்ததென்று பிரபல்யமாய் எழுதவேண்டியதென்னவென்றும் இந்தப்பத்திரிகை எழுதினவர்கள்யாரென்றுங்கேட்டுஎங்களைப்பிடித்துக்கொண்டு வரச்சொல்லி சில தூதர்களை எங்களாச்சிரமத்திற்கு அனுப்பினார்கள். அந்தத்தூதர்கள் எங்களையழைக்க நாங்களும் நிஷ்டையிலே பார்த்துக்கொண்டு அந்த துஷ்டர்கள் மெத்தத்துரிதமாயிருக்கிறார்களென்று தெரிந்து இவர்களுடன் பேசலாகாதென்று அவர்களோடுபோனோம். அந்தத் துஷ்டர்கள் எங்களைக்கண்டமாத்திரத்திலே, நீங்கள் யார்? இந்தப்பிரகாரமாக ஏன் எழுதினீர்கள்? இந்தக்கலியுகத்துக்கு நீங்களாதெய்வம்? கெடுவைத்தெழுதவேண்டிய காரியமென்னவென்று கேட்டதற்கு நாங்கள் எங்களுக்கு ஸ்ரீசாம்பமூர்த்தி பிரசன்னமாகிவந்து சொன்னபடியினாலே இப்படிக்கு எழுதியனுப்பி வைத்தோமென்று சொன்னோம் அப்படிக்கு உங்களிடத்தில் ஸ்ரீசாம்பசிவமூர்த்தி பிரசன்னமாகியிருந்தால் ஒருசோதனை பார்க்கிறோம் அதற்கு நீங்கள் நின்றால் எங்களுக்குத்தெய்வந்தானென்று சொன்னார்கள் அதற்கு நாங்கள் சொன்னது உங்கள் மனதிற்கு எப்படி செய்யவேண்டியதோ அப்படி செய்யலாமென்று சொன்னோம்.

அதற்குமேல் அந்த துஷ்டர்கள் கருமருந்தையெடுத்து ஜோடிபீரங்கியைச்செலுத்தி குண்டுபோட்டுகெட்டித்து எங்களை ஜோடிபீரங்கியெதிரே நிறுத்தி, இனி உங்களுடைய மகத்துவத்தைப் பாருங்களென்று ஜோடிபீரங்கியிற் தீயைக்கொளுத்தினார்கள் அப்போது இரண்டுகுண்டுகளும் அக்கினிமயமாய்பெழும்பிஎங்கள்கை

யிலே வந்திருந்து அதைமேற்படி துஷ்டர்கள்கண்டு நடுநடுங்கி திகிலெடுத்து இவர்கள் எழுதினபடி நடக்குமென்று யோசித்து வணங்கி விலகிப்போய்நின்றார்கள் அச்சமயத்திலே மகாமுனீஸ்வரர்களும், மகாசித்தர்களும் மகாயோகீஸ்வரர்களும் பிரசன்னமாகி வந்து ஓய் சிதம்பரதீக்ஷதரே, இராமயோகி ஐயரே, உங்களை இந்த துஷ்டர்களுக்கு பகவானென்றும் கர்த்தாவென்றுந் தெரியாமல் இந்த துஷ்டர்கள் மதத்தினாலே இத்தனை இம்சை பண்ணினார்கள் இவர்களுக்கு ஆகாதகாலம்சம்பவித்துக்கொண்டபடியினாலே இந்தத் துற்புத்தி வந்ததென்று சொல்லிப்போய் விட்டார்கள். ஆகையால் அக்ஷய வருஷம் போனதின்பிறகு பிரபவ வருஷம் முதற்கொண்டு வீரப்பிரமம் பூமிக்கு அதிபதியாக இராஜயபரிபாலனஞ் செய்யவருகிறார்கள். அப்போது உங்களுக்கு அந்த விருத்தாந்தம் இன்பமாய் பகவத் தர்மசிந்தனையாகவிருக்கப் புண்ணிய புருடர்களுக்குத்தெரியும்படியாகி, மகாமுனீஸ்வரர்களும் மகாசித்தர்களும் ஆக்ஞாபித்தபடி நாங்கள் தேசதேசத்திற்கெழுதி அனுப்பிவைத்திருக்கிறோம். அப்பாலுண்டான இரண்டாம் பத்திரிகை புண்ணிய புருஷர்களுக்கும் சிவசிந்தனையாயிருக்கப்பட்ட சிவனடியார்களுக்கும் நேத்திரானந்தத்திலே எரிவுகண்டு இரத்தம் பிறக்கும். இதற்குப் பிரதி எழுதிக்கொண்டு பூசைபண்ணினபேர்களுக்கு மனதிலே எந்தக் காரியத்தை நினைத்துப்பூசை செய்தார்களோ அந்தக் காரியம அவர்களுக்குச் சித்தியாகும். ஆகையால் இதை உள்ளபடிதானென்று நடக்கிறபேர்களுக்கு மகாதர்ப்பணப் பண்ணின பலன் பிறக்கும், இதற்குப்பிசகில்லை மேற்கண்டபடிக்கு பிரபவவருடத்தில் வீரபிர்மம் அவர்கள்வந்து இராச்சியபரிபாலனம் பண்ணுவார்கள் இந்தப் பத்திரிகையை நிச்சயமென்றெண்ணி நடக்க வேணும் நாங்களிரண்டுபேரும் தேசங்களுக்குள் பிரவேசிக்கிறோம். இந்தப் பத்திரிகையை யார்கொண்டுவந்து கொடுக்கிறார்களோ அவர்களுக்கும், வாசிக்கிறவர்களுக்கும் ஜோடிவஸ்திரமும் சொர்ணபுஷ்பமும் கொடுத்தால், அவர்களுக்கு இஷ்டப்படி தங்கள் வீட்டில் உற்பத்தியாயிருக்கும்படியாய் ஸ்ரீ சாம்பசிவமூர்த்தி கட்டளைபண்ணுவார். இதை எழுதினபேரும், வாசித்தபேரும், கேட்டபேரும், நிச்சயமென்றெண்ணிப் பூஜித்தபேரும் இந்தப்பத்திரிகையை நம்பினபேரும் இவர்களெல்லோரும் தீர்க்காயுசுடையவராயும் அற்பாயுசுக்காரராயிருந்தாலும் நாங்கள் வருகிறமட்டுக்கும் சுகமேயிருப்பார்கள் மேற்கண்டபடி போற்றுபவர்களை எமன் அணுகவும் எமன் கோட்டாலைசெய்யவும் கூடாது. சகல சம்பத்துக்களும் உண்டாகியிருக்கும் சாம்பசிவமூர்த்தியே துணைசெய்வார். விதற்பத்தேசத்தைச்சேர்ந்த மல்லிகார்ச்சுனபுரத்திலிருக்கும் அருணாசலஞ்செட்டி

யானவர் கப்பல் வியாபாரங்கொண்டு கடலேறி போகிறபோது கப்பலை சுழல்காற்று தள்ளிக்கொண்டுபோய் ஒருதிசையில்தள்ள தண்ணீர்கடலேற்றும் புட்பக தீவுக்கப்பாலே போய்ச் சேர்ந்திருக்கிறபோது அந்த புட்பகதீவிலே முப்பத்துமுக்கோடி தேவர்கள் நாற்பத்தெண்ணாயிரங்கோடி ரிஷிகள், கணநாதர்கள், முனிவோர்கள், தும்புரு நாரதருக்குள்ளே அனந்தங்கோடி சித்தர்கள் முதலானபேர்கள் திருச்சபைக்கூட்டமாக தம்புரு, வீணை, சரமண்டலம், சங்கு, ஜெயகண்டி, செகநாதங்கள் தேவதுந்துமிகள் முழக்கமாக வேதவாக்கியத்துடனே பாரிஜாதபுஷ்பம் காதவழிக்குக் கமகமவென்ற வாசத்துடனே, இப்படி ஆரவாரச்சத்தத்துடன் சமுத்திர முழக்கம்போல் அரகரா வென்கிற சப்தமும், "ஹரிஓம் நம நாராயண" வென்கிற சப்தமும் தொனிக்கப் பரிபூரணகடாக்ஷக் கிருபையுடனே சம்மதமுமாயிருக்கிற வேளையில் அந்தத் திருகூட்டத்திலிருக்கின்ற அதிசயங்களைப் பார்த்துக்கொண்டு நிற்கும்போது அந்த யோகீஸ்வரர்களிலே ஒருவர் அந்தக் கப்பலருகாமையில் வந்து நின்றுகொண்டு, அதுயாரடா கப்பற்காரா வென்று கேட்க அப்போது அருணாசலம்செட்டி சொன்னது சுவாமி! அடியேனுக்கு விதர்ப்ப தேசத்தைச் சேர்ந்த மல்லிகார்சுன புரத்திலிருக்கும் வைசியகுலம் அடியேன்பேர் அருணாசலஞ்செட்டி யென்று சொன்னபோது அந்த யோகீஸ்வரர் சொல்லுவார்; அடாமானிடவா நீ இங்கேவரவொண்ணாதே என்றபோது, அந்த அருணாசலஞ்செட்டி யோகீஸ்வரரைப்பார்த்து சுவாமி அடியேனுடைய கப்பலை சுழல்காற்று இங்கே கொண்டுவந்து விட்டதென்று சொன்னான். அப்போது அவர் சொன்னது வந்தபடியே கப்பலை நடத்திக்கொண்டுபோ உன்னிடத்தில் ஒரு காரியமும் சொல்லப்படாதென்று யோகீஸ்வரர் சொல்ல அவரை இந்த அருணாசலஞ்செட்டி மிகவும் பய பக்தியாக வணங்கி, சாஷ்டாங்கமாக தெண்டனிட்டுக் கேட்க யோகீஸ்வரர் ஒரு வசனம் திருவுளம்பற்றினார்.

இந்த புஷ்பகத்தீவிலே திருமூர்த்திகளும், தேவர்களுள் இருக்கிற இடத்திலேநீ கால்நாழிகை தரிக்கப்படாது சாபம்வந்து சித்திக்கும் அதுஎதினாலென்றால் பரமரகசியம்சொல்லப்பட்ட இடம் ஆனால்நீ இவ்விடத்திற்கு வந்தபோதே முன்பூர்வஜென்மத்திலே வைசியர் குலத்தில் புண்ணிய புருஷனாயிருந்தபடியினாலே உன்னிடத்தில் உள்ள காரியஞ்சொல்லப் படுமென்று யோகீஸ்வரர் உளமகிழ்ந்து கனிவாய் திறந்து திருவுளம்பற்றியருளிய திருவுளப்பிரசாதமென்னவென்றால்:—

ஆதிமூலமாகிய நாராயணமூர்த்தி கலியுக அவதாரமாய்ஸ்ரீமத் வீரப்பிரமமும், இராமயோகி ஐயரும், சிதம்பர தீக்ஷதருயாகத் தேவர்கள் கூட்டத்துடனே இந்தப் புஷ்பகவனத்திலே எழுந்தருளியிருக்கின்றார்கள் இனிமேல் சிலநாட்சென்றதின்பிறகுபூலோகமெல்லாம் ஒருகுடையின்கீழாக ஆறிலொரு கடமைகொண்டு ஆராச்சி மணியுங்கட்டி செங்கோல் செலுத்தி பூமியாளும்படி ஜெயம்பெற்றுவாழ்வார்கள். அப்போது பூமியெல்லாம் புஷ்பமாரியாகவும் பெய்யும், புலியும் பசுவும் ஒருதுறையில் நின்று தண்ணீர்குடிக்கும் ஆயிரத்தெட்டு சிவாலயங்களும், நூற்றெட்டுத் திருப்பதியும், பிரம்மாலயங்களும், குருவாலயங்களும், அன்னச்சத்திரங்களும் வீரசிம்மாசனத்திற்குடையபஞ்சமகுடத்திற்குச்சேர்ந்த அறுபத்துநாலு சிம்மாசனாதிபதிபட்டங்களும் மென்மேலும் விருத்தியாகி நன்றாய் விளங்கும் அப்போது இந்தப்பூமியில் நடக்கின்ற நடத்தையெல்லாம் அந்த சுவாமிகள் திருவுளத்திலே தெரிந்து உத்தரவான திருவுளப்பிரசாதமென்னவென்றால்; பிர்ம்ம, க்ஷத்திரிய, வைசியசூத்திரரென்கிற குலாசாரமுந்தப்பி அவர்கள் வேதமார்க்கமுந்தப்பி, மாதா பிதா குருவென்கிற சத்தியமுந் தப்பி குருஒரு சிஷ்பனும், சிஷ்பன்ஒரு குருவாகவும், இராஜாஒரு சேவகனாகவும், சேவகன்ஒரு இராஜாவாகவும், மேல்கீழாகவும், கீழ்மேலாகவும் அசத்தியமும் அநியாயமும். புருஷன் ஒரு பெண்சாதியாகவும், பெண்சாதி ஒரு புருஷனாகவும் மெய் பொய்யாகவும், பொய் மெய்யாகவும், கொலை, களவு காமம், குருத்துரோகமும், இப்படி பஞ்சமாபாதகமும் மிகுந்து பூமியெல்லாம் சமனமூடிப்போயிருக்கிறதென்றும், இதுவெல்லாம் சங்காரஞ்செய்யத்தக்கதாக பிர்மதேவனும் வேதாளத்தை விட்டும், கொள்ளைக்காச்சலைவிட்டும், சிலது பால்ய ஜனங்களைச் சங்காரஞ்செய்து வெகுதானிவஹு காளியைவிட்டுக் காவுகொள்ளும்படியாய் சற்பேதியை விட்டார் இனிமேல் துற்காலைவிட்டு பலவித நோய்கண்டு ஜனங்கள் மடிந்துபோவார்கள். இந்த

மூன்றுபேர்களால் அஞ்ஞான இருட்களெல்லாம் நீங்கிவெளிச்சமாகும்படிக்கு இந்த மூன்று மந்திரங்களினாலே துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனஞ்செய்யவேண்டுமென்று உத்திரவுசெய்தார்கள் இன்னும்மூன்றுபேரும் திரிபுரத்தைத் தகனஞ் செய்ததுபோல அவசத்தியத்தையழித்து சத்தியத்தை நிலைநிறுத்தி காலபரிகாரஞ்செய்து சுவாமிகளிடத்தில் மூன்றுபேரும் வந்துசேர்ந்தமாத்திரத்திலே சுவாமிகள் பூமியாளும்படிக்கு வருவார்கள். மாதம் மூன்றுமழைபெய்யும். அப்போது புண்ணியபுருஷர்களாயிருக்கிற பேர்கள் சுவாமியார் பாதாரவிந்தம் தரிசனங்காண்பார்கள் இச்சங்கதியைப் பூமியெல்லாம் அறியப்படுத்தி வையென்று சொல்லிவிட்டு மாய்கையாய்த் திருக்கூட்டத்திலே போய்ச்சேர்ந்தார்

பிற்பாடு அருணாசலஞ்செட்டியானவர் கப்பலை நடத்திக்கொண்டு வெகுநாளைக்குப்பிறகு மல்லிகார்ச்சுனபுரத்திற்கு வந்து சேர்ந்தார். அப்போது இந்த வர்த்தமானங்களெல்லாம் விதர்ப்பதேச சத்துராஜாகேட்டு அருணாசலஞ்செட்டியாரை வணங்கி வேண்டி சந்தோஷம்பண்ணித் துதித்து சுகமேயிருந்தார்கள்.

இது சேதியை தேசதேசங்களுக்கும் எழுதி அனுப்பிவைத்து தானும் அந்த தேசத்தாரும் சோமவாரம் விரதமிருந்து சுவாமி பத்திரிகையை வைத்து அர்ச்சனைபண்ணி வருகிறார்கள். இந்தப் பத்திரிகையை பொய்யென்று சொன்னபேர்களும் இதை இகழ்ச்சிசெய்தபேர்களும் கெங்கைக்கரையிலே காராம்பசுவையும், மாதா: பிதா, குருக்களையுங்கொன்ற தோஷத்திலே போவார்கள். இதை மெய்யென்று மனதிலெண்ணி பூசை, அர்ச்சனை செய்தபேர்கள், லோக ரக்ஷகராகிய ஸ்ரீ வீரப்பிர்மத்தினுடைய பாதார விந்தம் பெற்று சகல சம்பத்துடனே வாழ்ந்திருப்பார்கள். இது, நிச்சயம் சுபம்!

## ஸ்ரீ வீரப்போக வசந்தராய நம:

ஸ்ரீகாரணவஸ்துவாகிய பாத்துவாச ரிஷியினுடைய ஆச்சிரமத்திலிருக்கும் ஸ்ரீவீரபிர்மம் அவர்கள் திருமுகம் சுவாமி சாஸ்திரியாராகிய மகா நாராயண சிம்மாசாரியர் விகாரிவருஷ பிறந்த பகல்களுக்கும் மகாசாஸ்திரியார் ஸ்ரீ ஜோசியர் அவர்களுக்கும் சகலலோகப் பிரபஞ்சத்திற்கும் என் சம்மதியாக எழுதியனுப்பிவித்தநிருபம் துந்துபிவருஷ வைகாசிமீ 13உ குருவாரம் பூராடநக்ஷத்திரம் திரயோதசி கூடின சுபயோக சுபதினத்தில் பாத்துவாசருடைய ஆச்சிரமம் போய்ச்சேர்ந்தோம் அங்கே அனேகமான வனங்களுண்டு அந்த வனத்திலே மகா முனீஸ்வரர்களும் சித்தாதிகளும்இருந்தார்கள் அவர்களைக்கண்டு தரிசனம்பண்ணினோம் அவர்களருகாமையிலே பதினொருவயதுள்ள குமாரனாகிய மகாமூர்த்தியாய் விளங்கியிருக்கிறாரே அவர் யாரென்று கேட்டதற்கு அங்கேயிருக்கிற மகாத்துமாக்கள் சொன்னது இந்தபாலகுமாரன் பிரபவ வருஷத்திலே பூமியாளுகிறதற்கு ஸ்ரீமந்நமோ நாராயணமூர்த்தியினுடைய அம்சையுடையவராயிருக்கிறார் காஷ்மீரமென்கிற மகாதேசத்தில் ஜெயசிங்கு என்ற க்ஷத்திரிய இராஜாவினுடைய தேவியானவள் மகாசௌந்திரிய சௌபாக்கியத்துடனே மகாபதிவிரதையாகவிருக்கின்ற திலர்தம்மையம்மாள் வயிற்றிலே உற்பத்தியாகிப் பிறந்தவர் இந்தப்புண்ணியபுருஷர் அதர்வணவேத முதலான சாஸ்திர வித்தைகளுங்கற்றிருந்தவர் அவரிடத்திலே மூன்று வருஷமிருப்பார். அதற்கப்பால் கேதாரவனத்திலே இரண்டு மாதம் அன்னம் புசிக்காமல் தபசுபண்ணி ஸ்ரீசாம்பசிவ மூர்த்தியினுடைய அனுக்கிரகத்தையடைவாரென்றும் பின்னும் மூன்று வரங்கள் வாங்கிக்கொண்டு அங்கேயிருந்து குரோதனவருஷ சித்திரைமீ பூர்வ பக்ஷமும் குருவாரமும் கூடின சுபதினத்தில் இந்திர நீல பர்வதத்திற்குப்போய் அங்கேயிருக்கிற மகா முனீஸ்வரர்களைக்கண்டு தரிசனம்பண்ணிக்கொண்டு அவர்களண்டையில் காத்திருந்து சிறிது வரப்பிரசாதங்களையும் பெற்றுக்கொண்டு தெய்வ மந்திரங்களை உபதேசம்பண்ணிக்கொண்டு மல்லிகார்ச்சுன சுவாமியைக்கண்டு தரிசனஞ்செய்து அவரண்டையில் சிலநாள் கழித்து துர்க்கையினிடத்தில் அனுமதிபெற்றுக்கொண்டு தங்கள் வம்சத்தாராகிய தருமராஜாக்கள் பட்டணத்திலே போட்டிருக்கிற திரவியங்களைக் கைவசப்படுத்திக்கொண்டு சிம்மாசனமும் கைக்கொண்டு இந்திரகிரிபர்வதத்தின் அடிவாரத்திலேயிருந்து சுலியாபுரம் வரையிலும் அனந்த நகரங்கள் விளங்க உண்டுபண்ணி அக்ஷயவருஷ முடிந்ததின்பிறகு பிரபவவருஷ முதலாக துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனம் பண்ணிக்கொண்டிருப்பார்கள் அப்போது சீமையிலே சுக சோபனகல்யாணமாக இருப்பார்கள்.

## கலிகாலத்தின் மகத்துவமாகிய காலக்கியானம்.

மாதம் மூன்று மழைபெய்யும் பிராமணர்களுக்கெல்லாம் நித்தியதருமங்கள் சகலமும் தாழ்ச்சியில்லாமல் நடக்கும்சிலராஜாக்கள் சண்டைபண்ணுவார்கள் சண்டை பண்ணினபேர்கள் சேதப்பட்டுப்போவார்கள். போனவர்கள்போக இருக்கிறவர்களுக்கும் ஐம்பத்தாறுதேசத்து ராஜாக்களும் நித்திய சுபசந்தோஷமாக இருந்து வாழ்வார்கள் இந்த பாலகுமாரன் ஸ்ரீஹரிஓம்நமோ நாராயணமூர்த்தியாகிய ஸ்ரீகிருஷ்ண அவதாரசித்தியாகிய ஸ்ரீ வீரபிர்மம் அவர்கள் பிறந்திருக்கிறார்கள். ஜெகத்திலே மகாபிரபல்யமாய் நடக்கும் அவருடைய மகிமையை பூலோகத்திலே சொல்லமுடியாது இது நிச்சயம் இதற்குச் சமுசயமில்லை இந்த சாமியாருடைய வாக்கியத்தை யாராவது வாசித்துஎழுதி பிரபல்யம்பண்ணினபேர்களுக்கு ஸ்ரீசாம்பசிவமூர்த்தி அனுக்கிரகத்தினாலே பூரணஆயுளுடையவராய்ச் சகலசம்பத்தும்பெற்று வாழந்திருப்பார்கள் இந்த மகிமையைப்பார்த்து எழுதாமல் மாறினாலும், பிரபல்யமாய் சொல்லாமற்போனாலும் மகத்தாகிய பிரம்மஹத்தி தோஷத்தையடைவார்கள் அப்படிவராதபடிக்கு இந்தப் பூமியின்கண்ணேயாரொருவர் எழுதிவைத்துக்கொண்டு அதற்கு பிரதி சீர்மைகளுக்கு அனுப்பிவித்தார்களோ அவர்கள் தீர்க்காயுசும் அஷ்டஐஸ்வரியமும் பெற்றிருப்பார்கள், இன்னும் அவர்களுக்குஎன்னபதவியென்றால் மகாமுனீஸ்வரர்களுக்கு மோக்ஷ உபசாரஸ்தோத்திரம் பண்ணினால் எவ்வளவுபலனோ அவ்வளவு பலனிலும் அதிகமான பலன் பெற்று வாழ்ந்திருப்பார்கள். இந்த சரித்திரம் எவரண்டையிருந்தாலும் அவர்கள் காரியம் அனுகூல ஜெயமாகும்.

ஓம். ஸ்ரீ வீரப்பிர்மம் நமஸ்து.

சுபம்! சுபம்!! சுபம்!!!

காலக்கியானம் முற்றிற்று.



# விளம்பரம்.

## கீழ்கண்டபுஸ்தகங்கள் எங்களிடம்மொத்தமாகவும் சில்லரையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

---

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| அகஸ்தீசுரர் தேவார திரட்டு | 0 | 4 | 0 |
| கிருஷ்ண லீலை | 0 | 6 | 0 |
| குங்கிலிய நாயனார் சரித்திரம் கீர்த்தனை | 0 | 4 | 0 |
| பட்டணத்தார் பாடல் சிரிது | 0 | 4 | 0 |
| குமரேசதகம் | 0 | 4 | 0 |
| அண்ணாமலைரெட்டியார் காவடிச்சிந்து | 0 | 4 | 0 |
| தொடுகுறி சாஸ்திரம் | 0 | 2 | 0 |
| மலையாளவரும சாஸ்திரம் | 0 | 4 | 0 |
| விருதிமாலை சக்கரத்துடன் | 0 | 4 | 0 |
| கந்த அனூதி | 0 | 4 | 0 |
| காலக்கியானம் | 0 | 2 | 0 |
| காலக்கியான கும்மி | 0 | 2 | 0 |
| கெவுளி சாஸ்திரம் | 0 | 2 | 0 |
| திருவனந்தபுரம் சித்திர மகாராஜா பாட்டு | 0 | 1 | 0 |
| மூலமகாராஜா பாட்டு | 0 | 1 | 0 |
| நாமர் ஸ்தோத்திரம் | 0 | 1 | 0 |
| நடராஜர் பத்து | 0 | 1 | 0 |
| சங்கரநயினார்கோவில் வழிநடைச்சிந்து | 0 | 2 | 0 |
| சங்கர சதாசிவ மாலை | 0 | 2 | 0 |
| அம்பட்டயன் பாட்டு | 0 | 1 | 0 |
| திருநெல்வேலி வெள்ளச் சிந்து | 0 | 1 | 0 |
| சுடலைமாடசுவாமி வில்பாட்டு | 0 | 2 | 0 |
| முத்துப்பட்டன் வில்பாட்டு | 0 | 2 | 0 |
| முப்பிடாரியம்மன் வில்பாட்டு | 0 | 2 | 0 |
| தர்க்கராஜன் கதை வில்பாட்டு | 0 | 2 | 0 |
| சங்கிலி பூதத்தான் கதை | 0 | 2 | 0 |
| சுதேசி கீர்த்தனை | 0 | 2 | 0 |
| தேவாரத்திரட்டு | 0 | 5 | 0 |
| திருப்புகழ் | 0 | 6 | 0 |
| பெரிய திருப்புகழ் | 0 | 8 | 0 |
| சர்பைப்பிராணம் | 1 | 8 | 0 |
| ஞானக்கோர்வை | 1 | 8 | 0 |
| ஞானக்கோர்வை (சின்னது) | 1 | 4 | 0 |
| அருணாசலப் புராணம் | 1 | 8 | 0 |
| ஆனந்தக்கழிப்பு | 0 | 1 | 0 |
| கலிகாலப் பாட்டு | 0 | 1 | 0 |

பழனியப்ப[illegible]ர் புக் டிப்போ,
சு. முத்தையாபிள்ளை [illegible] திருநெல்வேலிப் பாலம்